THE HON. THIRU K. ANBAZHAGAN: Government is considering such cases sympathetically. But anyhow the Finance Department is not able to provide funds at the time when it is necessary. Therefore this has been postponed for the Part II scheme of 1971-72. The cost involved in the proposal is Rs. 61,400 per annum recurring expenditure and Rs. 10,000 is the non-recurring expenditure. Therefore the proposal to undertake it is postponed till after six months.

மாயூரத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனை

*474 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மாயூரத்தில் நகராட்சியின் பாராமரிப்பிலுள்ள மகப்பேறு மருத்துவ மனையினை அரசாங்கமே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரம் நகராட்சி இரண்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை நடத்த வேண்டிய நிலைமையிருப்பதால் நிதி வசதி போதாமல் இருக்கிறது. எனவே, மகப்பேறு மருத்துவமனையைச் சரிவர நடத்த இயலவில்லையாதலால் இனிமேலாவது அரசு மேற்கொண்டு நடத்த ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அப்படி நகராட்சி களாலே ஏற்கனவே நடத்தப்பட்டு வருகிற மருத்துவ மனைகளை அரசுப் பொறுப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் இருக்கிறது. ஆனால் அரசு ஏற்கனவே அப்படிப்பட்ட மருத்துவ மனைகளுக்கு ஆகின்ற வற்றில் நான்கில் ஒரு பங்கை கிராண்டாக வழங்குகிறது. இந்த மகப்பேறு குழந்தைகள் மருத்துவ மனைக்கு 67-68-இல் 5,989 ரூபாயும், 68-69-இல் 6,415 ரூபாயும், 69-70-இல் 6,456 ரூபாயும் அரசாங்கத்தின் மூலமாக அதற்கான நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படி நிதி உதவியிலே இயங்கும் பல்வேறு மருத்துவ மனைகள் நாட்டிலேயிருப்பதால் அவற்றை யெல்லாம் உடனடியாகப் பொறுப்பேற்றுக் கொள்ள அரசாங்கத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லை.

முதுநிலை மருத்துவ அதிகாரிகள்

*475 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கிராமப்புறங்களில் மருத்துவச் சிகிச்சையை மேம்படுத்துவதற்காகச் சென்னை மாநகரில் நீண்டகாலமாகப் பணியாற்றி வரும் முதுநிலை மருத்துவ அதிகாரிகளை வெளியூர்களுக்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. கி. ஜெயராமன் : தலைவரவர்களே, மாவட்டத் தலை நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில் சிறப்புப் பட்டங்களை அல்லது டிப்ளமா பெற்றவர்கள் பல பேர்களை, அனுபவம் பெற்றவர்களைத் தவறாமல் நியமிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மிகச் சிறப்பு வாய்ந்த தகுதிகளுடைய மருத்துவ நிபுணர்கள் அதற்கேற்ற எல்லா வசதிகளுடைய மருத்துவ மனைகளிலே யிருந்தால்தான் அவர்களது அறிவும் திறனும் மக்களுக்குப் பயன்படும். specialists in certain departments என்று சிறப்பிக்கப்படுகிற அப்படிப்பட்ட தகுதியுடையவர்களை அரசாங்கம் அதற்கான முழு வசதிகள் இல்லாத மாவட்ட மருத்துவ மனைகளுக்கு அனுப்புவது ஏற்ற செயல் அல்ல. ஆனால் அதே நேரத்தில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் Post-graduate degree பெற்றவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வருகிறார்களோ அந்த அளவில் மாவட்ட மருத்துவ மனைகளில் இடம்பெறச் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

THIRU K. M. SUBRAMANIAN : If such medical officers are transferred because of their efficiency and seniority to mofussil hosptials, will it not result in suffering and inefficiency in city hospitals?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வியினுடைய உட்பொருள் அவ்வளவு பொருத்தமானது அல்ல. யார் யார் எந்தெந்த இடத்திலே மக்களுக்கு நன்மைகளை வழங்குகிறார்களோ, அந்த நன்மைகள் வளரும் அடிப்படையிலே வைத்து அந்தந்த இடத்திலே அமைக்கப்படுகிறார்கள். எப்பொழுது மிகுதியாகத் தேர்வு பெற்றவர்கள் கிடைக்கிறார்களோ, அப்பொழுது பரவலாகப் பயன்படுத்தப்படுவார்கள்.

Children's Care Homes in rural areas

* 476 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(a) whether there is any proposal to start Children's Care Homes in rural areas of the State; and

(b) if so, when the proposal will be given effect to?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : In the rural areas there is great necessity to open Children Care Homes. The answer given by the Hon. Minister is that there are no such proposals to open Children Care Homes in rural areas. May I know from the Hon. Minister whether this Government will consider sympathetically and open at least a few Children Care Homes in rural areas?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சில்ட்ரன் கேர் ஹோம்ஸ் வேறு, ஆர்பனேஜஸ், ஹோம் ஃபார் டெஸ்ட்டிடியூட்ஸ் என்பது வேறு. கேர் ஹோம் என்ற அடிப்படையில் இப்பொழுது டைரக்டர் ஆப்